


இராணிப்பேட்டை நகராட்சி காரையில் நடந்த ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் மனுக்கள் மீது உடனடி தீர்வு காணப்பட்ட பயனாளி களுக்கு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் ஜே.யு.சந்திரகலா, நகராட்சி தலைவர் சுஜாதா வினோத், நகர செயலாளர் பி.பூங்காவனம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இசட்.ஏ. அஜ்மல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் அவர்களின் சிற்றன்னை செல்லம்மாள் அவர்களின் மறைவிற்கு விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் அவர்களது வீட்டிற்கு நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தார்.

### தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்காக தயாரிக்கப்பட்ட

# ஆவணப்படத்திற்கு ‘ராஜத்கமல்’ விருது அறிவிப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பட நிர்வாகிகள் வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, ஆக. 20 -

தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்காக தயாரிக்கப்பட்ட “Timeless TamilNadu” என்ற ஆவணப் படத்திற்கு 71வது தேசிய திரைப்பட விருது பட்டியலில் சிறந்த கலை/பண்பாடுக்கான படத்திற்கான ‘ராஜத்கமல்’ விருது அறிவிக்கப்பட்டதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (19.8.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்காக தயாரிக்கப்பட்ட “Timeless TamilNadu” என்ற ஆவணப் படத்திற்கு 71வது தேசிய திரைப்பட விருது பட்டியலில் சிறந்த கலை/ பண்பாடுக்கான படத்திற்கான ‘ராஜத்கமல்’ விருது அறிவிக்கப்பட்டதற்காக செலிபிரிட்டி மேலாண்மை நிறுவனத்தைச் சேர்ந்த முதன்மை செயல் அலுவலர் பிரசாந்த் சோட்டாணி, நிறுவனர் மற்றும் இயக்குநர் திருமதி. நிஷா சோட்டாணி, இயக்குநர் காமக்யா நாராயன் சிங் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

முதலமைச்சர் அவர்களால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலும், தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களை பிரபலப்படுத்தவும், தமிழ்நாட்டை சர்வதேச அளவில் விரும்பத்தக்க சுற்றுலா மாநிலமாக மேம்படுத்துவதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக கடந்த 2022 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறையின் நிதி உதவியுடன் “Timeless TamilNadu” என்ற ஆவணப்படம் செலிபிரிட்டி மேனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தின் இயக்குனர் காமக்யா நாராயண சிங் அவர்கள் தலைமையில் தயாரிக்கப்பட்டது. இப்படமானது சென்னை மற்றும் மாமல்லபுரம், தஞ்சாவூர் மற்றும் நீலகிரி, திண்டுக்கல், கொடைக்கானல் மற்றும் மதுரை, காரைக்குடி மற்றும் இராமேஸ்வரம் போன்ற இடங்களில் ஒவ்வொரு இடத்திற்கும் 30 நிமிட காணொலியாக தயாரிக்கப்பட்டு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் டிராவல் எஃஸ்பி தொலைக்காட்சி சேனல்கள் மற்றும் சமூக ஊடகங்களில் காட்சிப்படுத்தப்பட்டு பெறும் வரவேற்பினை பெற்றுள்ளது.

இந்த ஆவணப்படம் 2023ஆம் ஆண்டிற்கான 71வது தேசிய திரைப்பட விருது பட்டியலில் திரைப்படங்கள் அல்லாத பிரிவின் கீழ் சிறந்த கலை/ பண்பாடுக்கான “Timeless TamilNadu” என்ற ஆவணப்படமாக தேர்வாகி “ராஜத்கமல்” என்ற விருதிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையில் தமிழ்நாட்டை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்லும் நோக்கத்துடன் “தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை 2023” முதலமைச்சர் அவர்களால் 26.09.2023 அன்று முதன்முதலாக வெளியிடப்பட்டது. மேலும், தமிழ்நாட்டில் 2023 ஆம் ஆண்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை 28.72 கோடி ஆகவும், 2024ஆம் ஆண்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை 30.80 கோடி ஆகவும் கணிசமாக உயர்ந்துள்ளது.

இந்தியாவின் முன்னோடி சுற்றுலாத் தலங்கள் அதிகமுள்ள மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டில் பல்வகையான சுற்றுலா தலங்கள், பிரம்மாண்ட கோயில்கள், அழகிய மலை சுற்றுலாத் தலங்கள், வனவிலங்கு சரணாலயங்கள் மற்றும் கடற்கரைகள் போன்ற பல்வகைப்பட்ட சுற்றுலாத் தலங்களைக் கொண்டுள்ளது. அனைத்து சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் பல்வேறு இடங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

இதுபோன்ற பல்வேறு குறும்படங்கள் சுற்றுலாத்துறை மூலம் தயாரிக்கப்பட்டு உள்நாடு மற்றும் வெளிநாடு சுற்றுலா LILLIGDOT சந்தைகள் மற்றும் விளம்பர முகாம்களில் விளம்பர ப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலமாக பல்வேறு மாநிலங்களிலிருந்தும் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது.

இந்த நிகழ்வின்போது, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி. சந்திர மோகன், சுற்றுலாத்துறை இயக்குநர் தா. கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் பொது மேலாளர் திருமதி ச. கவிதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள் கூட்டம்

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு

தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் கூட்டம் 24.8.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில், கிருஷ்ணகிரி, "தேவராஜ் மகாலில்" எனது தலைமையில்;

கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா, எம்.பி., சிறப்புரையாற்றிட;

வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், எஸ்.மோகன் வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா. முருகவேல், பி.டி. பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர் வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த. வனராஜ், வி.பி. மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ.சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ்.சீனிவாசன், கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட மற்றும் மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்** : ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் வர்த்தகர் அணி பட்டியல் பெறுதல் மற்றும் கழக அணி வளர்ச்சி குறித்து.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை 18.
*நாள் : 13.08.2025.*

**காசி முத்துமாணிக்கம்,**
செயலாளர்
*தி.மு.க. வர்த்தகர் அணி*



மதுரையில் அமைந்துள்ள காந்தி நினைவு அருங்காட்சியகத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆய்வு செய்து பார்வையிட்ட பின், வளாகத்தில் அமைந்துள்ள காந்தியடிகள் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே.ராஜாராமன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

### நாட்டில் உள்ள 73,732 கல்வெட்டுகளில்

# 26,416 கல்வெட்டுகள் தமிழ் எழுத்துக்களில் உள்ளன!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!



புதுடெல்லி, ஆக. 20 -

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செப்புத் தகடுகள் வெளிநாடுகளில் உள்ள அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ளதா? என்று வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:

இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை (ASI) மற்றும் தமிழ்நாடு மாநில தொல்பொருள் துறையால் தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட பண்டைய மன்னர்கள் / ஆட்சியாளர்களின் சில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செப்புத் தகடுகள் வெளிநாடுகளில் உள்ள அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ளதா? அப்படியானால், அவற்றின் விவரங்கள் மற்றும் தென்னிந்தியாவில் காணப்படும் மொத்த செப்புத் தகடுகளின் எண்ணிக்கை, அரசு வம்சாவளி வாரியாக தருக? அவை பாதுகாக்கப்படும் அருங்காட்சியகங்கள் யாவை?

தென்னிந்தியாவில் காணப்படும் 1.5 லட்சம் பழங்காலக் கல்வெட்டுகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் கி.மு. 200 முதல் கி.பி. 1800 வரையிலான தமிழ் மொழியில் உள்ளன என்பது உண்மையா? அப்படியானால், வேலூர் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் காணப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டுகள் உட்பட அதன் விவரங்கள் தருக?

இந்திய தொல்லியல் துறையின் கல்வெட்டுப் பிரிவு, சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் பல எபிகிராஃபிகா இண்டிகா தொகுதிகளையும் தென்னிந்திய கல்வெட்டுகள் தொடர்களாக வெளியிட்டுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் எபிகிராஃபிகா இண்டிகாவின் கடைசி தொகுதி மற்றும் தென்னிந்திய கல்வெட்டுகளை ASI வெளியிட்ட தேதி என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் கலாச்சாரம் மற்றும் சுற்றுலா அமைச்சர் கஜேந்திர சிங் சேகாவத் எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் வருமாறு:-

தமிழ்நாட்டில் இந்திய தொல்பொருள் ஆய்வு மையம் (ASI) கண்டுபிடித்த செப்புத் தகடு கல்வெட்டுகள் எதுவும் வெளிநாடுகளில் உள்ள அருங்காட்சியகங்களில் வைக்கப்பட வில்லை.

இந்திய தொல்லியல் துறையால் நகலெடுக்கப்பட்ட மொத்த கல்வெட்டுகளின் எண்ணிக்கை சுமார் 73,732 ஆகும். அவற்றில் 26,416 தமிழ் எழுத்துக்களில் உள்ளன. வேலூர் மக்களவைத் தொகுதியில் காணப்படும் வரலாற்று கல்வெட்டுகள் உட்பட இந்தக் கல்வெட்டுகள், இந்திய கல்வெட்டு குறித்த வருடாந்திர அறிக்கைகளில் புரிந்துகொள்ளப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

இந்திய தொல்லியல் துறை எபிகிராஃபியா இண்டிகா மற்றும் தென்னிந்திய கல்வெட்டுகளின் பல தொகுதிகளை வெளியிட்டுள்ளது. எபிகிராஃபியா இண்டிகாவின் சமீபத்திய தொகுதி 2012-இல் வெளியிடப்பட்டது மற்றும் தென்னிந்திய கல்வெட்டுகள் 2025-இல் வெளியிடப்பட்டன.

தென்னிந்திய கல்வெட்டுகளின் 45 தொகுதிகளில், 18 தொகுதிகள் சுதந்திரத்திற்கு முன்பு வெளியிடப்பட்டன, மீதமுள்ள 27 தொகுதிகள் சுதந்திரத்திற்குப் பிறகு வெளியிடப்பட்டவை.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

### உள்நாட்டு கால்நடை இனங்களின் மேம்பாட்டில்

# ராஷ்ட்ரிய கோகுல் மிஷனின் முக்கிய நோக்கம் என்ன?

## மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 20 -

மக்களவையில் கள்ளக்குறிச்சி தே.மலையரசன் எழுப்பி கேள்விகள் வருமாறு:-

ராஷ்ட்ரிய கோகுல் மிஷனின் (RGM) நோக்கங்கள் மற்றும் முக்கிய கூறுகள் மற்றும் உள்நாட்டு கால்நடை இனங்களின் மேம்பாட்டில் RGM இன் நோக்கம் என்ன?

தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் மாநில வாரியாக நிறுவப்பட்ட மொத்த கோகுல் கிராம்கள் மற்றும் காளை தாய் பண்ணைகளின் எண்ணிக்கை ?

பழங்குடி கால்நடை இனங்களின் உற்பத்தித்திறன் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் இந்த மிஷனின் தாக்கம் என்ன?

இந்த மிஷனின் கீழ் விவசாயிகள் மற்றும் பால் கூட்டுறவுகளுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்படும் நிதி உதவி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு என்ன?

உள்நாட்டு இன கால்நடைகளை பாதுகாப்பை மேலும் ஆதரிக்க எதிர்கால ஆண்டுகளில் ராஷ்ட்ரிய கோகுல் மிஷனை விரிவுபடுத்தவோ அல்லது மாற்றியமைக்கவோ ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங்களைக் கொண்டிருக்கிறதா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

உள்நாட்டு மாடு இனங்களைப் பாதுகாப்பதில் முன்னேற்றம், உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் கோகுல் கிராம்களை நிறுவுதல் உள்ளிட்ட RGM செயல்படுத்தலின் நிலை என்ன?

அதிக மகசூல் தரும் உணவு வகைகள் மற்றும் சிலேஜ் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் உட்பட கால்நடைகளுக்கு உணவு கிடைக்கும் தன்மை மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்த ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்பட்ட உத்திகள்?

இவ்வாறு கள்ளக்குறிச்சி தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.

### மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம். எஸ். கணேஷ்குமார் தலைமையில்

# விருத்தாசலம் எம்.எஸ். (எ) எம்.செல்வராசு 28 ஆம் ஆண்டு நினைவஞ்சலி!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் சி.வி.கணேசன் பங்கேற்பு!

கடலூர், ஆக. 20 -

கடலூர் மாவட்டம் விருத்தாசலத்தின் “சீமான் வீட்டு செல்லப்பிள்ளை” என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் அன்புடன் அழைக்கப்பட்டவர் விருத்தாசலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் மாநில நிலவள வங்கி தலைவர், ஒருங்கிணைந்த தென்னாற்காடு முன்னாள் மாவட்டக் கழக செயலாளர், முன்னாள் கழக அமைப்பு செயலாளர் எம்.எஸ். (என்கின்ற) எம்.செல்வராஜ் அவர்களின் 28 வது நினைவு தினம் விருத்தாசலத்தில்18.08.2025 திங்கள் கிழமை அன்று அனுசரிக்கப்பட்டது.

அதனையொட்டி பாலக்கரையில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அவரது திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு அரங்கத்திலிருந்து அவரது இல்லம் வரை கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் தலைமையில் நடைபெற்ற நினைவஞ்சலி பேரணியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு அவரது இல்லத்திற்கு சென்று திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வில் நகர செயலாளர் தண்டபாணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.டி. கலைச்செல்வன், ஒன்றிய செயலாளர்கள் தி. வேல்முருகன், பாவாடை, கோவிந்தசாமி, கனக .கோவிந்தசாமி, கோட்டேரி. சுரேஷ், ஆசைத்தம்பி, விருத்தாசலம் நகர மன்ற தலைவர் டாக்டர் சங்கவி முருகதாஸ், மங்கலம்பேட்டை பேரூர் செயலாளர் பாத்திரக்கடை செல்வம், பேரூராட்சி தலைவர் சம்சாத் பாரி இப்ராஹிம், மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் எஸ்.ராமு, பொதுக்குழு உறுப்பினர்கள் அரங்க. பாலகிருஷ்ணன், குரு சரஸ்வதி,ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும்

நகர கழக துணை செயலாளர்கள் நம்பிராஜன், சுந்தரமூர்த்தி, மாவட்ட பிரதிநிதி ஆட்டோ பாண்டியன்,

நகர,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் பொன்.கணேஷ், பட்டி. வசந்தகுமார், நடராஜன், வெங்கடேசன், அருண் பிரபாகர், தனசேகர், அப்துல் அஜித், ஒன்றிய துணை செயலாளர்கள் பூலாம்பாடி டி. அண்ணாதுரை நாரையூர் என். குண சேகரன், கருவேப்பிலங்குறிச்சி முத்து மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள்

அறிவுடை நம்பி, இளங்கோவன், சுரேஷ், அறிவழகன், முகமது பாசில், முத்து, விருத்தாசலம் நகர மன்ற உறுப்பினர்கள் அன்பழகன், தளபதி, அறிவழகி முருகன், முத்துக்குமரன், வசந்தி புருஷோத்தமன், தீபா மாரி முத்து, ராசாத்தி சரவணன், மாவட்ட மாணவர் அணி சதீஷ், செல்வமணி நகர மாணவரணி கிருஷ்ணா, மார்டின், நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் குமார், நிஷாந்த், அஜய், பாலு, இளையராஜா, குரு, மற்றும் மாவட்ட, நகர , ஒன்றிய, பேரூர் கழக செயலாளர் மற்றும் நிர்வாகிகள் சார்பு அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கிளை கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.